# KAYALPATTINAM MUNICIPALITY
## KAYALPATTINAM MUNICIPALITY COUNCIL MONTH OF MAY FORM 3
### Minutes of the Meeting held on 31.07.2018

<table>
<tr><th>Date of council meeting</th><th>Decision Number</th><th>Subject of the Agenda</th><th>Resolution</th></tr>
<tr><td>31.07.18</td><td>1623</td><td><u>மன்றப் பொருள்:1</u><br>காயல்பட்டணம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு நிதி 2017–18ன் கீழ் கீழ்க்கண்ட விபரப்படியான சாலை மேம்பாட்டுப்பணிகளை ரூ.100.00 இலட்சம் மதிப்பில் செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.21422/2017/E3 நாள்:03.10.2017ன்படி நிர்வாக அனுமதி பெற்றும் தலைமைப்பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்:24545/2017/DO2 நாள்:30.11.2017ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு.ஏ.அலெக்ஸாண்டர்,பிச்சிவிளை என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>வேலையின் பெயர்</th><th>சாலையின் நீளம் (கி.மீ)</th><th>சாலையின் அகலம் (மீட்டரில்)</th><th>மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>காயல்பட்டணம் நகராட்சி அப்பாபள்ளி தெரு சாலை, மொஹதூம் தெரு சாலை செப்பு குடைஞ்சான் தெரு சாலை மற்றும் சதுக்கைத்தெரு சாலையில் ஜலாலியா ஹால் முதல் வடக்கு பகுதி மற்றும் சொளுக்கார் தெரு சாலைகளில் சிமெண்ட் பேவர் பிளாக்கல் பதித்து மேம்பாடு செய்தல்</td><td>1.425</td><td>5.00</td><td>100.00</td></tr>
</table>
மேற்கண்ட சாலைகளில் செப்பு குடைஞ்சான் தெரு சாலை மற்றும் சதுக்கைத் தெரு சாலையில் ஜலாலியா ஹால் முதல் வடக்கு பகுதி சாலை ஆகிய இரு சாலைகள் மட்டுமே தற்பொழுது பேவர் பிளாக்கல் அமைத்து சாலை அமைக்கும் பணிமுடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மூன்று சாலைகளையும் தார்ச்சாலைகளாக அமைக்க வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் மற்றும் அப்பகுதி ஜமாத் நிர்வாகிகளின் கோரிக்கையின்படி, பணி மேற்கொள்ளப்படாத மீதமுள்ள மூன்று சாலைகளையும் (அப்பாபள்ளி தெரு சாலை,மொஹதூம் தெரு சாலை மற்றும் சொளுக்கார் தெரு சாலை) பேவர் பிளாக்கல் சாலைக்கு பதிலாக தார்ச்சாலைகளாக அமைக்கவும் ஏற்கனவே நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.100.00இலட்சத்திற்கு மிகாமல் மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களிடம் உரிய அனுமதி பெற கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 1624 | **<u>மன்றப் பொருள்:2</u>**<br>காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கட்டிடங்களுக்குரிய சொத்துவரியினை 01.04.2018 முதல் சீராய்வு செய்வதற்கு அரசாணை எண்:73, நாள்:19.07.2018 (ம) 76, நாள்:26.07.2018 ன்படி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1625 | **<u>மன்றப் பொருள்:3</u>**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொது நிதித்திட்டம் 2018–19ன் கீழ் காயல்பட்டணம் நகராட்சியில் முடிவடைந்து பயன்பாட்டிற்கு வந்துள்ள புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டத்தில் தினசரி குடிநீர் விநியோக பணிகளை ஒப்பந்த அடிப்படையில் செய்திடல் பணிக்கு 18.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1).திரு.டி.மாதவன்<br>20எ,ஒடக்கரை, மதிப்பீடு ரேட்டை விட 0.08% குறைவு<br>காயல்பட்டணம்<br>2).திரு.ஆர்.தலவாணிமுத்து,<br>38,பூந்தோட்டம், மதிப்பீடு ரேட்டை விட 1.38% கூடுதல்<br>காயல்பட்டணம்<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.டி.மாதவன்,காயல்பட்டணம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1626 | **<u>மன்றப் பொருள்:4</u>**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொது நிதித்திட்டம் 2018–19ன் கீழ் காயல்பட்டணம் நகராட்சியில் முடிவடைந்து பயன்பாட்டிற்கு வந்துள்ள புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டத்தின் தலைமை நீரேற்றும் நிலையத்தில் மின் மோட்டார் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் செய்திடல் பணிக்கு 18.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1).திரு.டி.மாதவன்<br>20எ,ஒடக்கரை, மதிப்பீடு ரேட்டை விட 0.09% குறைவு<br>காயல்பட்டணம்<br>2).திரு.ஆர்.தலவாணிமுத்து, | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | 38,பூந்தோட்டம், மதிப்பீடு ரேட்டை விட 1.17% கூடுதல்<br>காயல்பட்டணம்<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.டி.மாதவன்,காயல்பட்டணம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | 1627 | **மன்றப் பொருள்:5**<br>காயல்பட்டணம் நகராட்சியில் சிவன்கோவில் தெரு அக்பர்ஷா நகர் பிரதான சாலை முதல் தெரு, இரண்டாம் தெரு மற்றும் மூன்றாம் தெரு சாலைகள் மிகவும் மோசமடைந்துள்ளதால் பொதுமக்கள் மற்றும் பள்ளி வாகனங்கள் செல்வதற்கு மிகவும் சிரமமாக இருப்பதால் பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட சாலையை மேம்பாடு செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.49.00இலட்சத்திற்கும் மேற்கண்ட பணியினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1628 | **மன்றப் பொருள்:6**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித்திட்டம் 2018–19ன் கீழ் காயல்பட்டணம் நகராட்சி கே.எம்.டி மருத்துவமனை எதிர்புறம் பேருந்து நிறுத்தம் கட்டுதல் பணிக்கு 18.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1).திரு.டி.மாதவன்<br>20எ,ஓடக்கரை, மதிப்பீடு ரேட்டை விட 2.01% கூடுதல்<br>காயல்பட்டணம்<br>2).திரு.ஆர்.தலவாணிமுத்து,<br>38,பூந்தோட்டம், மதிப்பீடு ரேட்டை விட 0.003% குறைவு<br>காயல்பட்டணம்<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஆர்.தலவாணிமுத்து, காயல்பட்டணம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1629 | **மன்றப் பொருள்:7**<br>காயல்பட்டணம் நகராட்சி– டெக்ஸ்கோ நிறுவன ஒப்பந்தப்பணியாளர்களின் (ஓட்டுநர்–4 நபர்) ஒப்பந்த காலம் நீட்டிப்பு 22.07.2018 முதல் 21.07.2019 வரையிலான ஓராண்டுகாலம் நீட்டிப்பு செய்ய அந்நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற கடித எண்–Lr.No/kayal mc/TTN/DVRS/2018-19, நாள்:30.07.2018-ன்படி ஓராண்டு காலம் நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1630 | <u>**மன்றப் பொருள்:8**</u><br>காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளிலுள்ள 18 வார்டுகளில் சேகரமாகும் குப்பையினை தற்சமயம் மட்கும் குப்பை, மட்காத குப்பை என தனியாக பிரித்து மட்கும் குப்பையிலிருந்து உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்சமயம் 2011–12 ஆம் ஆண்டு IUDM திட்டத்தின் மூலம் பிளாஸ்டிக் குப்பைத்தொட்டியில் (50kg) வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தற்சமயம் பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகள் பழுது அடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மட்கும் குப்பை மட்காத குப்பையினை வீட்டிலேயே பிரித்தெடுக்க இவ் பிளாஸ்ட்டிக் குப்பைத் தொட்டி அவசியமாகிறது. எனவே தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வீஸ், திருச்சி மூலம் 200 எண்ணம் பிளாஸ்டிக் குப்பை தொட்டி வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.300000/– மட்டும் இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1631 | <u>**மன்றப் பொருள்:9**</u><br>காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கட்டிடங்களுக்குரிய சொத்துவரியினை அரசாணை எண்:73, நாள்:19.07.2018 (ம) 76, நாள்:26.07.2018 ன்படி 01.04.2018 முதல் சீராய்வு செய்து சொத்துவரி உயர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு ஆட்டோ மூலம் ஒலிபெருக்கி விளம்பரம் மேற்கொள்ளவும், மேற்படி சொத்துவரி சீராய்வு செய்வதற்கான படிவங்கள் அனைத்தும் பிரிண்டிங் எடுப்பதற்கும், டிஜிட்டல் பேனர் அமைப்பதற்கும் (ம) இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து சொத்துவரிவிதிப்புதாரர்களுக்கு அறிவிப்பு கடிதம் நிர்வாக அவசர அவசியம் கருதி தபால் மூலம் அனுப்புவதற்கும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.200000/– மட்டும் இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து செலவுகள் செய்திட மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1632 | <u>**மன்றப் பொருள்:10**</u><br>காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மூலம் பணியாற்றிவரும் துப்புரவு பணியாளர்கள் மற்றும் இரவுக்காவலர், அலுவலக உதவியாளர், வாகன ஓட்டுநர், துப்புரவு மேற்பார்வையாளர்களுக்கு வழங்க வேண்டிய சீருடைகள், காலணிகள் மற்றும் சோப்புகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களான Mouth Mask, Hand Cloves, Reflecting Jacket, Rain Coat, Cotton Cap போன்றவைகள் 2018–19 ஆம் ஆண்டிற்கான பொருட்களை திருச்சி மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வீஸ் நிறுவனத்திடமிருந்து வாங்கி உபயோகிக்கவும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.200000/– மட்டும் இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1633 | **<u>மன்றப் பொருள்:11</u>**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளில் குப்பை எடுக்கும் பணியானது பொதுசுகாதாரப்பிரிவு பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேற்படி பணிகள் மேற்கொள்ள வேண்டிய தளவாடசாமான்கள் 2013–2014 ஆம் ஆண்டுக்கு வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுவந்தது. தற்சமயம் தளவாடசாமான்கள் பயன்படுத்த முடியாமல் உள்ளது. எனவே பொதுசுகாதாரப்பிரிவுக்கு தேவையான மண்வெட்டி, அரிவாள், இரும்பு வாளி, கடப்பாறை கம்பி, சாக்கடை கரண்டி, ரோடு கூட்டும் மாறு, , விளக்குமாறு, பிளாஸ்டிக் சட்டி, சவுல் போன்றவற்றை தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ், திருச்சி மூலம் வாங்கி உபயோகிக்கவும்,, அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.200000/– மட்டும் இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து செலவுகள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1634 | **<u>மன்றப் பொருள்:12</u>**<br>காயல்பட்டணம் நகராட்சி வழக்கு எண்:OS No:108/2016–க்கு வழக்கிற்கான வழக்கு கட்டணம் ரூ.2000/– மட்டும் அரசு வழக்கறிஞர் திரு.எ.அமிர்தராஜ் என்பவருக்கு இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1635 | **<u>மன்றப் பொருள்:13</u>**<br>காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட பைபாஸ் ரோட்டில் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ள தெருவிளக்குகளுக்கு மின்இணைப்பு பெறுவதற்கு உரிய கேட்பு தொகை ரூ.2780/– மட்டும் காயல்பட்டணம் மின்வாரிய அலுவலகத்திற்கு இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு | அனுமதிக்கப்பட்டது |
| | 1636 | **<u>மன்றப் பொருள்:14</u>**<br>காயல்பட்டணம் நகராட்சி அலுவலக கணினி பயன்பாட்டிற்காக Zebronics USB MUB-2 , Zebion Mouse-1 Pegasus, திருநெல்வேலி நிறுவனத்திலிருந்து நிர்வாக அவசர அவசியம் கருதி வாங்கி பயன்படுத்துவதற்கும், அதற்கான செலவு தொகை ரூ.783/– மட்டும் இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1637 | **<u>மன்றப் பொருள்:15</u>**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் வடகிழக்கு பருவமழை தொடங்க இருப்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், திருநெல்வேலி மண்டல இயக்குநர் அவர்கள் நடத்திய ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டவாறு தேவையான அளவு பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்புத்தூள், கிருமிநாசினி போன்றவை கையிருப்பு வைக்க வலியுறுத்தியதன் பேரிலும், மழை வெள்ளம் பகுதி குப்பை எடுத்தப்பகுதியில் பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்புத்தூள் தெளிப்பதற்கும், திருச்சி தமிழ்நாடு | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ் மூலம் 6 டண் பிளீச்சிங் பவுடர், 6டண் சுண்ணாம்புத்தூள், 200 லிட்டர் கிருமிநாசினி வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.600000/– மட்டும் இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு.</td><td></td></tr>
<tr><td></td><td>1638</td><td>மன்றப்பொருள்:16<br>காயல்பட்டணம் நகராட்சியில் Sec-15-ல் பணிகள் மேற்கொண்டது பதிவேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.</td><td>பார்வையிடப்பட்டது</td></tr>
<tr><td></td><td>1639</td><td>மன்றப்பொருள்:17<br>தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம் நகராட்சி 2002ம் வருடத்தில் பல்லுயிர் பன்மியச் சட்டம் (மத்தியசட்டம்), 2004ம் வருடத்திய பல்லுயிர் பன்மிய விதிகள் மற்றும் 2017ம் வருடத்திய தமிழ்நாடு பல்லுயிர் பன்மிய விதிகள் ஆகியவற்றில் தொகுத்தளிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு இணங்க, இந்நகராட்சியில் தனித்துவமிக்கதாவரங்கள் மற்றும் பல்லுயிர்கள் ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக பின்வரும் உறுப்பினர்களை கொண்ட பல்லுயிர் பன்மிய மேலாண்மைக் குழு தோற்றுவிக்கப்பட்டமைக்கு தனிஅலுவலரின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.
<table>
<tr><td>1</td><td>திரு.ஜெ.பிரேம் ஆனந்த்,பி.எஸ்.சி,ஆணையாளர்<br>காயல்பட்டணம் நகராட்சி</td><td>குழுத்தலைவர்</td></tr>
<tr><td>2</td><td>திரு.குமார்,நகரமைப்பு ஆய்வாளர்(பொ)<br>காயல்பட்டணம் நகராட்சி</td><td>செயலாளர்</td></tr>
<tr><td>3</td><td>திருமதி.அமலக்கனி,க/பெ.எஸ்.பல்கீஸ்,<br>கடையக்குடி,காயல்பட்டணம்</td><td>உறுப்பினர்</td></tr>
<tr><td>4</td><td>திருமதி.எ.சகாய செல்வி,க/பெ.அந்தோணி,<br>8/4, கஸ்தூரிபாய் தெரு, திருமழிசை<br>ஆதார் எண்.9154 4683 0729</td><td>உறுப்பினர்</td></tr>
<tr><td>5</td><td>திருமதி.சமுத்திரக்கனி,க/பெ.முத்து,<br>மங்களவாடி,காயல்பட்டணம்<br>(ஆதிதிராவிடர்)</td><td>உறுப்பினர்</td></tr>
<tr><td>6</td><td>திருமதி.முத்து ஹாஜரா,கெ.வி.எ.டி டிரஸ்ட்,<br>குறுக்குத் தெரு,காயல்பட்டணம்</td><td>உறுப்பினர்</td></tr>
</table></td><td>அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>1640</td><td>மன்றப்பொருள்:18<br>காயல்பட்டணம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொண்ட வகைக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினசரி நாளிதழில் மாவட்ட அளவில் விளம்பரம் செய்த வகைக்கு கீழ்க்கண்டவாறு பில்பட்டியல் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><td>வ.எண்</td><td>பணிகள்</td><td>தினசரி நாளிதழ்</td><td>தொகை (ரூ)</td></tr>
</table></td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | காயல்பட்டணம் நகராட்சி கடற்கரைப் பகுதியில் ON Site Compost அமைத்தல்<br>காயல்பட்டணம் நகராட்சி அலுவலக வளாகத்தில் ON Site Compost அமைத்தல்<br>காயல்பட்டணம் நகராட்சியில் பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள கழிப்பிடத்தை மேம்பாடு செய்து தகவல் நிலையமாக மாற்றுதல்<br>காயல்பட்டணம் நகராட்சி அலுவலக புதிய கட்டிடத்தில் அலுவலர்களுக்கு Internet இணைப்பு வழங்கும் பணி செய்தல்<br>காயல்பட்டணம் நகராட்சியில் பிரதான குடிநீர் குழாய்கள் மற்றும் விநியோகக் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரி செய்தல் | பிற்பகல் தமிழ் நாளிதழ் | 14700/- | | |
| | | | 2 | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித்திட்டம் 2016-17 (2018-19)<br>ந.க.எண்.97/2018/அ3<br>காயல்பட்டணம் நகராட்சி கே.எம்.டி மருத்துவமனை எதிர்புறம் பேருந்து நிறுத்தம் கட்டுதல்<br>நகராட்சி பொதுநிதி 2018-19 ந.க.எண்.117/2018/அ3 | தினசூரியன் தமிழ் நாளிதழ் | 20160/- | | |

| | | | |
|---|---|---|---|
| | | காயல்பட்டணம் நகராட்சியில் முடிவடைந்து பயன்பாட்டிற்கு வந்துள்ள புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டத்தில் தினசரி குடிநீர் விநியோக பணிகளை ஒப்பந்த அடிப்படையில் செய்திடல்<br>காயல்பட்டணம் நகராட்சியில் முடிவடைந்து பயன்பாட்டிற்கு வந்துள்ள புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டத்தின் தலைமை நீரேற்றும் நிலையத்தில் மின் மோட்டார் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் செய்திடல் — மக்கள் முகம் — 12000/–<br>மேற்படி பட்டியல் தொகை இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு. | |
| | 1641 | மன்றப்பொருள்:19<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சியால் சேகரிக்கப்படும் குப்பைகளை சுமார் 30 வருடங்களுக்கு மேல் நகராட்சிப்பகுதியான பப்பரப்பள்ளியில் கொட்டப்பட்டு வரப்படுகிறது.தற்பொழுது நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் அறிவுரைப்படி தற்பொழுது நகராட்சியால் வீடுகளிலிருந்து மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் எனத் தனித்தனியாக பிரித்து அதனை நுண் உரக்குடில்-க்கு கொண்டு சென்று அதனை உரமாக்கிட நடவடிக்கை எடுத்திடவும் ஏற்கனவே குப்பைகள் கொட்டப்பட்டுள்ள இடத்தில் உள்ள பழைய குப்பைகளை அப்புறப்படுத்தி அதனையும் உரமாக்கிட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களால் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதால் பழைய குப்பைகள் கொட்டப்பட்டுள்ள இடமான பப்பரப்பள்ளியில் உள்ள குப்பைகளை அளவிட்டு வரைபடத்துடன் கூடிய அறிக்கை வழங்கிய வகைக்கு Sri Sai Recycle Solutions,Madurai என்ற நிறுவனத்திற்கு செலவினத்தொகை ரூ.15750/-த்தை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1642 | <u>**மன்றப் பொருள்:20**</u><br>(ந.க.எண்:785/2013/அ1, நாள்:02.03.2018) நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் மட்கும் குப்பை, மட்காத குப்பை என பிரித்து கொடுக்க ஏதுவாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,திருநெல்வேலி அவர்களின் ந.க.எண்:2920/14/அ4, நாள்:04.01.2018–ன்படி மக்கும் குப்பை மட்காத குப்பை பற்றிய மல்டிகலர் நோட்டீஸ் மற்றும் ஸ்டிக்கர் போன்றவைகள் அச்சடித்து வழங்க முன் அனுமதி வழங்கி உத்தரவு வழங்கியதையும், அதற்குண்டான செலவு தொகையினை இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |